
திருச்சிற்றம்பலம்

அருள்தரும் தையல்நாயகியம்மை உடனாய

அருள்மிகு வைத்தியநாதர் துணை



# ஐம்பெரும் புராணம் பாராயணத் திரட்டு

வெளியீடு

**தொண்டை மண்டல சிவனடியார் திருக்கூட்டம்**

சென்னை - 600 116. அலைபேசி : 9840819439

# இல்லத்தில் இனிய வழிபாடு

**அன்பு நலம் சார்ந்த பெருமக்களே,**

நாம் ஒவ்வொருவரும் நம்முடைய இல்லத்தில் இறைவரை வழிபாடு செய்து கொண்டுதான் இருக்கிறோம். ஒரு சிலருக்கு எப்படி வழிபாடு செய்வது என்று அறியாமலிருக்கின்றார்கள். அவர்களுக்காக இக்கட்டுரை, சில செய்திகளைத் தருகிறது.

பூசை செய்வதற்கு தனி அறையோ அல்லது பொது இடத்திலேயோ ஒரு அலமாரியிலோ இறைவரின் திருமேனிகளை வைத்தும், திருப்படங்கள் வைத்தும் வழிபாடு செய்கிறோம். இவ்வாறு உள்ள அமைப்பில் நாம் ஒரு செய்தியை நன்கு கவனிக்க வேண்டும். அதாவது நாம் வழிபடும் கடவுளரின் திருபடங்களுக்கு மேல் சிவபெருமானின் திருப்படம் இருக்க வேண்டும். ஏனெனில் அவர்தான் அனைத்து கடவுளர்க்கும் கடவுள். நம்முடைய குலதெய்வப் படங்கள், நமது விருப்பத்திற்குரிய தெய்வப் படங்கள் என வைத்து வழிபடும் அனைத்திற்கும் மேலாக எல்லாம் வல்ல சிவபெருமானின் படங்கள் வைக்க வேண்டும்.

அதே போல் சைவ நெறியில் இருப்பவரான நாம், நம் நெறி தழைக்க அருள்பணி செய்திட்ட சமயக்குரவர்கள் நால்வர், சந்தானக் குரவர்கள் நால்வர், திருத்தொண்டர்கள் அறுபத்து மூவர் (நாயன்மார்கள்) தெய்வச் சேக்கிழார் போன்றோரின் திருவுருவப் படங்களையும் வைத்து வழிபாடு செய்வது நமது நன்றிக் கடனாகும். நாம் வழிபடும் இத்திருவுருவப் படங்களுக்கு நாள்தோறும் மலர் வைத்து, தீபம் ஏற்றி, தூபம் காட்டி, திருவமுது செய்து நம் தமிழ் வேதங்களாகிய பன்னிரு திருமுறைகள் ஓதுதல் வேண்டும்.

## மந்திரம்

இறைவழிபாட்டிற்கு வடமொழி மந்திரங்கள் தாம் உரியது என்று நாம் மயங்கி கிடக்கின்றோம். நம்முடைய தாய்மொழியிலே வழிபாடு செய்வது மந்திரம் ஆகாது என்று நாமே கருதுகிறோம். இறைவரை போற்றும் வடமொழி மந்திரங்களை விட திருநெறிய தமிழ் எள்ளளவும் தாழ்ந்தது அன்று.

**''வடமொழியும் தென்தமிழும் தாள் நிழல் கீழ் சேர''** என்றும் **''ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்''** என்றும் தமிழ் வேதம் முழங்குவதை காண்க.

மேலும் மந்திரம் என்பது என்ன?

**''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த**
**மறைமொழி தானே மந்திரம் என்ப''**

என தொல்காப்பியம் இலக்கணம் வகுத்துள்ளதை எண்ணுக, நம் திருவள்ளுவ பேராசானும், ''**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்.**'' என்று அருளியுள்ளார்.

திருமறைகாட்டில் வேதம் பூட்டிய கதவை திறந்தது நம் திருநெறிய தமிழல்லவா! திருமயிலாப்பூரில் எலும்பும் சாம்பலுமாக இருந்த பூம்பாவையை உயிரோடு எழச் செய்தது தமிழ்வேதம் தானே! மேலும் திரு அவிநாசித் திருத்தலத்தில் முதலை உண்ட பாலகனை உயிரோடு மீட்டது செந்தமிழ் தானே! தில்லையில் ஆடல்புரியும் ஆனந்த மாநடராசன் எழுதியது, திருவாசகமாகிய தமிழ் வேதம் தானே! சிவபெருமானே தமிழ், தமிழே சிவம்! என்பதை உணர்க.

**''பண்ணும் பதம் ஏழும் பல ஓசைத் தமிழ் அவையும்''**

- திருஞானசம்பந்தர்

**''... பன்னிய நூல் தமிழ்மாலை பாடுவித்து என் சிந்தை மயக்கறுத்த திருவருளினானை செங்காட்டங்குடியதனில் கண்டேன் நானே''**

- அப்பர் பெருமான்

**''பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்...'' - நம்பியாரூரர்**
**''தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்...''**

- மாணிக்கவாசகர்

எனவே நம் இல்ல வழிபாட்டில் தமிழ்வேதம் முழங்க வேண்டும். அந்த தெய்வீக ஒலி அலைகள் நம் இல்லம் முழுவதும் நிரம்பி நம் வாழ்வை மேம்படுத்தும் என்பது உறுதி.

# பூசை செய்யும் முறை

நம் இல்ல வழிபாட்டை எப்படிச் செய்தல் வேண்டும் என்பதைக் காண்போம். நாம் முன்பே கூறியது போன்று இறைவர் திருப்படங்களை அமைத்துக் கொண்டு, திருப்படங்களுக்கு மலர் சூட்டுக. பின்பு திருவிளக்கை ஏற்றுக. அப்போது,

**இல்லக விளக்கது இருள் கெடுப்பது**
**சொல்லக விளக்கது சோதி உள்ளது**
**பல்லக விளக்கது பலரும் காண்பது**
**நல்லக விளக்கது நமச்சிவாயவே.**

என்ற தேவாரம் பாடவும். பின்பு,

நம்முடைய இறைவர் எழுந்தருளி அருள் செய்ய வேண்டும் என எண்ணி மலர் தூவி வழிபடுக. உடனே இறைவருக்கு திருவடி நீர், உட்கொள்ள நீர், உச்சியில் நீர் விடுக. அதன் பின்னர் தூபம் அல்லது ஊதுபத்தியை மூன்று முறை வலமாக காட்டி மலர் இடுக. அப்போது,

**சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்**
**தமிழோடு இசை பாடல் மறந்து அறியேன்**
**நலம் தீங்கிலும் உன்னை மறந்து அறியேன்**
**உன் நாமம் என் நாவில் மறந்து அறியேன்**
**உலந்தார் தலையில் பலி கொண்டு உழல்வாய்**
**உடலுள் உறு சூலை தவிர்த்து அருளாய்**
**அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில**
**வீரட்டானத்து உறை அம்மானே.**

என்ற தேவாரம் பாடவும். பின்னர், திருப்படங்களுக்கு விளக்கு காட்டுதல் வேண்டும். அப்போது,

**பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தர் ஆகி**
**அரும்பொடு மலர்கள் கொண்டு ஆங்கு ஆர்வத்தை உள்ளே வைத்து**
**விரும்பி நல் விளக்குத் தூபம் விதியினால் இடவல்லார்க்குக்**
**கரும்பினில் கட்டி போல்வார் கடவூர் வீரட்டனாரே.**

என்ற தேவாரம் பாடவும், பின்னரே, அமுது செய்வித்தல் வேண்டும். (தங்களுடைய வசதிக்கு ஏற்றவாறு கற்கண்டு, திராட்சை, கனி வகைகள், தேங்காய், பழம் போன்றவைகளில் ஏதேனும் ஒன்று)

**அன்னம்பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்**
**பொன்னம் பாலிக்கும் மேலும் இப்பூமிசை**
**என் அன்பு ஆலிக்குமாறு கண்டு இன்புற**
**இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே.**

என்ற தேவாரம் பாடவும். பின்னர், கற்பூரம் காட்டவும். அப்போது,

**''கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி**
**அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்**
**சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று**
**பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி! போற்றி!**

என்ற பாடலை பாடவும். பின்னர், இறைவனை போற்றி அர்ச்சனை செய்க.

**வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி**
**மீளாமே ஆள் என்னைக் கொண்டாய் போற்றி**
**ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி**
**ஓவாத சத்தத்து ஒலியே போற்றி**
**ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி**
**ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி**
**காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி**
**கயிலை மலையானே போற்றி போற்றி.**

என்று பாடவும், பின்னர், அவரவர்களின் நேரத்திற்கேற்ப பன்னிரு திருமுறைகளோ அல்லது ஐம்பெரும் புராணமோ (1- தேவாரம், 2- திருவாசகம், 3- திருவிசைப்பா, 4- திருப்பல்லாண்டு, 5- திருத்தொண்டர் புராணம்) பாடி வழிபாடு செய்க.

*நிறைவாக இறைவனிடத்தில் மனம், மொழி, மெய்களால் செய்த பிழைகளை பொறுக்க வேண்டுதல்.*

**''பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்**
**போகமும் திருவும் புணர்ப்பானைப்**
**பின்னை என் பிழையைப் பொறுப்பானைப்**
**பிழை எல்லாம் தவிரப் பணிப்பானை**
**இன்ன தன்மையன் என்று அறிவொண்ணா**
**எம்மானை எளிவந்த பிரானை**
**அன்னம் வைகும் வயல் பழனத்து அணி**
**ஆரூரானை மறக்கலுமாமே'',**

*என்ற தேவாரப் பாடலை பாடி, எல்லா உயிர்களும் இனிது வாழ வாழ்த்துப் பாடி வழிபாட்டை நிறைவு செய்க*

**''வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்**
**கோன் முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க**
**நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க**
**மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்.''**

*குறிப்பு - வழிபாட்டின் தொடக்கத்திலும் நிறைவிலும் 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லி மகுடம் சொல்லுங்கள்.*

**''தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**
**''ஏகம்பத்துறை எந்தாய் போற்றி**
**பாகம் பெண்ணுருவானாய் போற்றி''**

**''காவாய் கனகத் திரளே போற்றி**
**கயிலை மலையானே போற்றி போற்றி''**

திருச்சிற்றம்பலம்

*காலையில் துயில் எழும் பொழுது*

''போற்றி என் வாழ் முதலாகிய பொருளே....'' என்று கூறி எழுக.

*நீராடும் போது,* **''சென்றாடும் தீர்த்தங்கள் ஆனார் தாமே**

**திரு ஆலங்காடு உறையும் செல்வர் தாமே''** என்று கூறி குளிக்கவும். தூய ஆடை உடுத்திய பின் நெற்றியில் திருநீறு அணியும் போது ''**ஓம் நமசிவாய**'' என்று கூற வேண்டும்.

இறைவர் திருப்படங்களுக்கு பூக்களோ அல்லது ஏதேனும் ஒரு பச்சிலையாவது பறித்து சூட்டி வழிபடுக.

**''யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை-திருமூலர்''**

உணவு உண்ணும் போது **''அன்னம் பாலிக்கும் தில்லை சிற்றம்பலம்...''** என்று சொல்லிய பின் உண்ணுக.

உறங்கத் தொடங்கும் போது

**''.... துஞ்சும் போதாக வந்து துணை எனக்காகி நின்று, அஞ்சல் என்று அருள வேண்டும் ஆவடுதுறையுளானே''**

என்று சொல்லுக.

**திருச்சிற்றம்பலம்**

*நமச்சிவாய வாழ்க*

**''விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்நெறி ஞானமாகும்''**

*திருவுடையீர்,*

விளக்கு என்றால் இருளை நீக்கி பொருளை காட்டுவது என்று பொருள். உலகத்தில் உள்ள புற இருளை நீக்குவது சூரியன் என்கிற விளக்கு. இல்லத்தில் உள்ள இருளை நீக்குவது திருவிளக்கு நம்முடைய அறிவில் கலந்துள்ள அறியாமை ஆகிய அக இருளை நீக்கி மெய்ப்பொருளை காட்டுவது நமசிவாய என்னும் ஐந்து எழுத்து ஆகிய விளக்கு என்பதை **''இல்லக விளக்கது இருள் கெடுப்பது..... நல்லக விளக்கது நமச்சிவாயவே''** என்று திருநாவுக்கரசர் அருளியுள்ளார்.

நாயன்மார்கள் அறுபத்து மூவரில் திருவிளக்கு ஏற்றி சிவபெருமான் திருவருள் பெற்றவர் பலர். திருமறைக்காடு (வேதாரண்யம்) எனும் திருதலத்தில் எரிகின்ற திருவிளக்கின் திரியை ஒரு எலி அறியாமல் தூண்டிட அதை அடுத்த பிறப்பில் மாபலி சக்ரவர்த்தியாக பிறக்கச் செய்தார்.

**''நிறை மறைக்காடு தன்னில் நீண்டு எரி தீபம் தன்னைக்
கறை நிறத்து எலி தன் மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்டவான் உலகம் எல்லாம்
குறைவறக் கொடுப்பர்போலும் குறுக்கை வீரட்டனாரே''.**

*- திருநாவுக்கரசர்*

*திருச்சிற்றம்பலம்*

**மூத்த நாயனார் திருஇரட்டை மணிமாலை**

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

**சைவ சமயாச்சாரியர்**

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசை கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி

**சேக்கிழார் புராணம்**

தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடிபோற்றி

**புறச்சந்தானக்குரவர்**

ஈராண்டிற் சிவஞானம் பெற்றுயர்ந்த மெய்கண்டார்
இணைத்தாள் போற்றி
நாராண்ட பல்லடியார்க் கருள்புரிந்த அருணந்தி
நற்றாள் போற்றி
நீராண்ட கடந்தை நகர்மறைஞான சம்பந்தர்
நிழற்றாள் போற்றி
சீராண்ட தில்லைநகர் உமாபதியார் செம்பதுமத்
திருத்தாள் போற்றி

**சண்டேசரும் மற்றை அடியார்களும்**

தந்தைதா ளொடும்பிறவித் தாளெறிந்து
நிருத்தரிரு தாளைச் சேர்ந்த
மைந்தர்தாள் வேதநெறி சைவநெறி
பத்திநெறி வழாது வாய்மெய்
சிந்தைதா னரடிக்கே செலுத்தினராய்ச்
சிவாநுபவச் செல்வராகிப்
பந்தமாந் தொடக்கறுத்த திருத்தொண்டர்
தாள்பரவிப் பணிதல்செய்வாம்

திருச்சிற்றம்பலம்

## முதல்நாள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

### திருவாசகம்

மெய்தான் அரும்பி, விதிர்விதிர்த்து
உன்விரை ஆர் கழற்கு, என்
கைதான் தலைவைத்து, கண்ணீர்
ததும்பி, வெதும்பி, உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னை, போற்றி
சயசய போற்றி! என்னும்
கைதான் நெகிழ விடேன்; உடை யாய்
என்னைக் கண்டுகொள்ளே

### திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

### திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை! வளர்கநம்
பத்தர்கள்! வஞ்சகர் போய் அகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி எல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைகோன்
அடியோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

### பெரியபுராணம்

உலகெ லாம்உணர்ந்து ஓதற் கரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம் .

திருச்சிற்றம்பலம்

## இரண்டாம் நாள்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிரும்மே.

**திருவாசகம்**

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய்! விண்ணோர்
பெருமானே! எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகும் அவர்நிற்க, என்னை யாண்டாய்க்கு
உள்ளந்தான் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால், உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையு மரமாம் தீ வினையி னேற்கே

**திருவிசைப்பா**

நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே!
வேறணி புவன போகமே! யோக
வெள்ளமே மேருவில் வீரா!
ஆறணி சடைஎம் அற்புதக் கூத்தா!
அம்பொன்செய் அம்பலத் தரசே!
ஏறணி கொடிஎம் ஈசனே! உன்னைத்
தொண்டனேன் இசையுமாறு இசையே

**திருப்பல்லாண்டு**

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங்கடந்த பொருள்அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம்**

பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரி யான்என்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை .

திருச்சிற்றம்பலம்

## மூன்றாம் நாள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

### திருவாசகம்

போற்றிஓம் நமசி வாய! புயங்கனே மயங்கு கின்றேன்;
போற்றிஓம் நமசி வாய! புகலிடம் பிறிதொன் றில்லை;
போற்றிஓம் நமசி வாய! புறம்எனைப் போக்கல் கண்டாய்;
போற்றிஓம் நமசி வாய! சயசய போற்றி போற்றி

### திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமாக் கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே

### திருப்பல்லாண்டு

நிட்டையி லாஉடல் நீத்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்சீ ராட்டுந்
திறங்களுமே சிந்தித்து
அட்டமூர்த் திக்கென் அகம்நெக ஊறும்
அமிர்தினுக் காலநிழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

### பெரியபுராணம்

நெற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர்
நீறணி மேனியர் அனேகர்
பெற்றமேல் கொண்ட தம்பிரான் அடியார்
பிஞ்ஞகன் தன்னருள் பெறுவார்
மற்றவர்க் கெல்லாந் தலைமையாம் பணியும்
மலர்க்கையில் சுரிகையும் பிரம்பும்
கற்றைவார் சடையான் அருளினாற் பெற்றான்
காப்பதக் கயிலைமால் வரைதான்

திருச்சிற்றம்பலம்

## நான்காம் நாள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாட்டுங் கொடியானே

### திருவாசகம்

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரான்என்னைத் தாங்கிக்கொள்ளே

### திருவிசைப்பா

பரிந்தசெஞ் சுடரோ பரிதியோ மின்னோ
பவளத்தின் குழவியோ பசும்பொன்
சொரிந்தசிந் துரமோ தூமணித் திரளோ
சுந்தரத் தரசிது என்னத்
தெரிந்தவை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வரிந்தவெஞ் சிலைக்கை மைந்தனை அஞ்சொல்
மையல்கொண்டு ஐயுறும் வகையே

### திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யும்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்டகன கத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

### பெரியபுராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணிலா னந்த அருவிநீர் சொரியக்
கைம்மல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்

திருச்சிற்றம்பலம்

## ஐந்தாம் நாள்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

**திருவாசகம்**

பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச் சுருக்குமன்பின்
வெற்றடி யேனை விடுதிகண் டாய்விடி லோகெடுவேன்
மற்றடி யேன்றன்னைத் தாங்குநர் இல்லைஎன் வாழ்முதலே
உற்றடி யேன்மிகத் தேறிநின் றேன்எனக் குள்ளவனே

**திருவிசைப்பா**

கண்பனி யரும்பக் கைகள் மொட்டித்தென்
களைகணே ஓலமென் றோலிட்
டென்பெலா முருகும் அன்பர்தங் கூட்டத்
தென்னையும் புணர்ப்பவன் கோயில்
பண்பல தெளிதேன் பாடிநின் றாடப்
பனிமலர்ச் சோலைசூழ் மொழுப்பிற்
செண்பகம் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே

**திருப்பல்லாண்டு**

புரந்தரன் மால் அயன் பூசலிட் டோலமிட்
டின்னம் புகலரிதாய்
இரந்திரந் தழைப்பஎன் உயிர்ஆண்ட கோவினுக்
கென்செய வல்லம்என்றும்
கரந்துங் கரவாத கற்பக னாகிக்
கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம்**

ஆதியாய் நடுவு மாகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா ஏக மாகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

## ஆறாம் நாள்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே

**திருவாசகம்**

கதியடி யேற்குன் கழல்தந் தருளவும் ஊன்கழியா
விதியடி யேனை விடுதிகண் டாய்வெண் டலைமுழையிற்
பதியுடை வாளரப் பார்த்திறை பைத்துச் சுருங்கஅஞ்சி
மதிநெடு நீரிற் குளித்தொளிக் குஞ்சடை மன்னவனே

**திருவிசைப்பா**

என்னைஉன் பாத பங்கயம் பணிவித்
தென்பெலாம் உருகநீ எளிவந்
துன்னைஎன் பால்வைத் தெங்கும்எஞ் ஞான்றும்
ஒழிவற நிறைந்தஒண் சுடரே
முன்னைஎன் பாசம் முழுவதும் அகல
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
கன்னலும் பாலும் தேனும்ஆ ரமுதும்
கனியுமாய் இனியைஆ யினையே

**திருப்பல்லாண்டு**

சேவிக்க வந்தயன் இந்திரன் செங்கண்மால்
எங்குந் திசைதிசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக் குழாங்குழா
மாய்நின்று கூத்தாடும்
ஆவிக் கமுதைஎன் ஆர்வத் தனத்தினை
அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத் தப்புறத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம்**

பொங்கிய திருவில் நீடும் பொற்புடைப் பணிக ளேந்தி
மங்கலத் தொழில்கள் செய்து மறைகளால் துதித்து மற்றும்
தங்களுக் கேற்ற பண்பில் தகும்பணித் தலைநின் றுய்த்தே
அங்கணர் கோயி லுள்ளா அகம்படித் தொண்டு செய்வார்.

திருச்சிற்றம்பலம்

## ஏழாம் நாள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுனைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றமோராய் கொள்கையினா லுயர்ந்த
நிறையுடையா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.

### திருவாசகம்

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்

### திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே

### திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே

### பெரியபுராணம்

கரந்த ரும்பயன் இதுவென உணர்ந்து
கம்பம் மேவிய உம்பர்நா யகர்பால்
நிரந்த காதல்செய் உள்ளத்த ளாகி
நீடு நன்மைகள் யாவையும் பெருக
வரந்த ரும்பொரு ளாம்மலை வல்லி
மாறி லாவகை மலர்ந்தபே ரன்பால்
சிரம்ப ணிந்தெழு பூசைநா டோறுந்
திருவு ளங்கொளப் பெருகிய தன்றே

திருச்சிற்றம்பலம்

## எட்டாம் நாள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

### திருவாசகம்

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்

### திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னைஆள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை யென்றும்நான் மறக்கேன்
முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோட்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே

### திருப்பல்லாண்டு

சேலும் கயலும் திளைக்குங்கண் ணார்இளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் கும்மென்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின் றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

### பெரியபுராணம்

பண்ணின் பயனாம் நல்லிசையும் பாலின் பயனாம் இன்சுவையும்
கண்ணின் பயனாம் பெருகொளியும் கருத்தின் பயனாம் எழுத்தஞ்சும்
விண்ணின் பயனாம் பொழிமழையும் வேதப் பயனாம் சைவமும்போல்
மண்ணின் பயனாம் அப்பதியின் வளத்தின் பெருமை வரம்புடைத்தோ

திருச்சிற்றம்பலம்

## ஒன்பதாம் நாள்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே.

**திருவாசகம்**

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ

**திருவிசைப்பா**

அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே
அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளம்அள் ளூறும்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே

**திருப்பல்லாண்டு**

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம்**

அண்டர் பிரானும் தொண்டர்தமக்
கதிபன் ஆக்கி அனைத்துநாம்
உண்ட கலமும் உடுப்பனவும்
சூடு வனவும் உனக்காகச்
சண்டீ சனுமாம் பதந்தந்தோம்
என்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்

திருச்சிற்றம்பலம்

## பத்தாம் நாள்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

மருந்துவேண் டில்இவை மந்திரங் கள்இவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்இவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள்வே டங்களே.

**திருவாசகம்**

இணையார் திருவடிஎன் தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையுந் துறந்தொழிந்தேன்
அணையார் புனற்றில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ

**திருவிசைப்பா**

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்
டத்திலங் கொருகூ றுன்கண்வைத் தவருக்
கமருல களிக்கும்நின் பெருமை
பித்தனென் றொருகாற் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யுங்
கைத்தலம் அடியேன் சென்னிமேல் வைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே

**திருப்பல்லாண்டு**

தாதையைத் தாள்அற வீசிய சண்டிக்கவ்
அண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும்
போனக மும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம்**

தூயவெண் ணீறு துதைந்தபொன்
மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ்
சிந்தையும் நைந்துருகிப்
பாய்வதுபோல் அன்புநீர் பொழிகண்ணும்
பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார்
புகுந்தனர் வீதியுள்ளே

திருச்சிற்றம்பலம்

## பதினோராம் நாள்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவி லின்மொழித் தேவிபாக மாயினான்
ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க் கேதுமேத மில்லையே.

**திருவாசகம்**

ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதற் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்
தாழைப் பறித்தவா தோணோக்கம் ஆடாமோ

**திருவிசைப்பா**

பாம்பணைத் துயின்றோன் அயன்முதல் தேவர்
பன்னெடுங் காலம்நிற் காண்பான்
ஏம்பலித் திருக்க என்னுளம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
தேம்புனற் பொய்கை வாளைவாய் மடுப்பத்
தெளிதரு தேறல்பாய்ந் தொழுகும்
பூம்பணைச்சோலை ஆவண வீதிப்
பூவணம் கோயில்கொண் டாயே

**திருப்பல்லாண்டு**

குழல் ஒலி யாழ்ஒலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ்சென்று விம்மி
மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி ஆளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடிஎம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம்**

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந்
திருவடிவும் மதுர வாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின்
மாலைகளுஞ் செம்பொற் றாளே
சார்வான திருமனமும் உழவாரத்
தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
பணிந்தேத்திப் பரவிச் செல்வார்

திருச்சிற்றம்பலம்

## பன்னிரண்டாம் நாள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகன்நால் வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த ஆலவா யாவது மிதுவே.

### திருவாசகம்

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

### திருவிசைப்பா

கடுவினைப் பாசக் கடல்கடந் தைவர்
கள்ளரை மெள்ளவே துரந்துன்
அடியிணை இரண்டும் அடையுமா றடைந்தேன்
அருள்செய்வாய் அருள்செயா தொழிவாய்
நெடுநிலை மாடத் திரவிருள் கிழிக்க
நிலைவிளக் கலகில்சா லேகப்
புடைகிடந் திலங்கும் ஆவண வீதிப்
பூவணம் கோயில்கொண் டாயே

### திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே

### பெரியபுராணம்

அண்ணலே!எனை ஆண்டுகொண் டருளிய அமுதே!
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே!
கண்ணி னால்திருக் கயிலையில் இருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள் புரிஎனப் பணிந்தார்

திருச்சிற்றம்பலம்

## பதின்மூன்றாம் நாள்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நான்அறியேன்
ஏற்றாய்அடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே

**திருவாசகம்**

மாவடு வகிரன்ன கண்ணிபங் காநின் மலரடிக்கே
கூவிடுவாய்? கும்பிக் கேயிடு வாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடுகுழல் போற் கரந்து பரந்ததுள்ளம்
ஆகெடு வேன்உடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே

**திருவிசைப்பா**

செம்பொனே! பவளக் குன்றமே! நின்ற
திசைமுகன் மால்முதற் கூட்டத்து
அன்பரா னவர்கள் பருகும்ஆ ரமுதே
அத்தனே! பித்தனே னுடைய
சம்புவே! அணுவே! தாணுவே! சிவனே!
சங்கரா! சாட்டியக் குடியார்க்
கின்பனே! எங்கும் ஒழிவற நிறைந்தேழ்
இருக்கையில் இருந்தவா றியம்பே

**திருப்பல்லாண்டு**

எந்தைஎந் தாய்சுற்றம் முற்றும் எமக்கமுதாம்
எம் பிரான்என் றென்று
சிந்தை செய்யும் சிவன் சீரடியார்
அடிநாய் செப்புரை
அந்தமில் ஆனந்தச் சேந்தன் எனைப்புகுந்
தாண்டுகொண் டாருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவ னேஎன்று
பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம்**

வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவளவெற் பெனஇடப் பாகம்
கொள்ளு மாமலை யாளுடன் கூடவீற் றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின்மன் னவனார்

திருச்சிற்றம்பலம்

## பதினான்காம் நாள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

### திருவாசகம்

குறைவிலா நிறைவே! கோதிலா அமுதே!
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே!
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே!
சிறைபெறா நீர்போல், சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே!
இறைவனே, நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே?

### திருவிசைப்பா

செங்கணா போற்றி! திசைமுகா போற்றி!
சிவபுர நகருள்வீற் றிருந்த
அங்கணா போற்றி! அமரனே போற்றி!
அமரர்கள் தலைவனே போற்றி!
தங்கள்நான் மறைநூல் சகலமுங் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கணா யகனே போற்றி! ஏழ்இருக்கை
இறைவனே! போற்றியே போற்றி!

### திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை! வளர்கநம்
பத்தர்கள்! வஞ்சகர் போய் அகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி எல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைகோன்
அடியோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

### பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்

திருச்சிற்றம்பலம்

## பதினைந்தாம் நாள்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

படைக்கல மாகவுன் னாமத் தெழுத்தஞ்சென் நாவிற்கொண்டேன்
இடைக்கல மல்லே னெழுபிறப் பும்முனக் காட்செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் றொழுது வணங்கித் தூநீறணிந்துன்
அடைக்கலங் கண்டா யணிதில்லைச் சிற்றம் பலத்தரனே.

**திருவாசகம்**

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்?
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்?
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே!
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர்கைம் மாறே.

**திருவிசைப்பா**

பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க
என்னெடுங் கோயில் நெஞ்சுவீற் றிருந்த
எளிமையை யென்றுநான் மறக்கேன்
மின்னெடும் புருவத் திளமயி லனையார்
விலங்கல்செய் நாடக சாலை
இன்னடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே

**திருப்பல்லாண்டு**

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங்கடந்த பொருள்அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம்**

வேதநெறி தழைத் தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம்ப ரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்

திருச்சிற்றம்பலம்

## பதினாறாம் நாள்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றெ னுள்ளமும் நானுங் கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவால வாயா திருவாரூரா
ஒருபற்றி லாமையுங் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே.

**திருவாசகம்**

வெறுப்பனவே செய்யும்என் சிறுமையைநின்
பெருமையினாற்
பொறுப்பவனே! அராப் பூண்பவனே! பொங்கு
கங்கைசடைச்
செறுப்பவனே! நின் திருவருளால் என்
பிறவியைவேர்
அறுப்பவனே! உடையாய் அடியேன்உன்
அடைக்கலமே.

**திருவிசைப்பா**

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள் இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடங்குலா வினரே

**திருப்பல்லாண்டு**

நிட்டையி லாஉடல் நீத்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்சீ ராட்டுந்
திறங்களுமே சிந்தித்து
அட்டமூர்த் திக்கென் அகம்நெக ஊறும்
அமிர்தினுக் காலநிழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம்**

சோதிமுத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீதுதாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்று
ஆதி யார்அரு ளாதலின் அஞ்செழுத்து
ஓதி யேறினார் உய்ய உலகெலாம்.

திருச்சிற்றம்பலம்

## பதினேழாம் நாள்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

மட்டு வார்குழ லாளொடு மால்விடை
இட்ட மாவுகந் தேறு மிறைவனார்
கட்டு நீத்தவர்க் கின்னரு ளேசெயும்
சிட்டர் போலுஞ் சிராப்பள்ளிச் செல்வரே

**திருவாசகம்**

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு
ளைப் புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே

**திருவிசைப்பா**

கடியார் கணம்புல்லர் கண்ணப்பர் என்றுன்
அடியார் அமர்உலகம் ஆளநீ ஆளாதே
முடியாமுத் தீவேள்வி மூவா யிரவரொடும்
குடிவாழ்க்கை கொண்டுநீ குலாவிக்கூத் தாடினையே

**திருப்பல்லாண்டு**

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யும்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்டகன கத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம்**

சிந்தை இடையறா அன்பும் திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாம் கருத்தும் கையுழ வாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற் பொலிதிரு நீறும்
அந்தமி லாத்திரு வேடத் தரசும் எதிர்வந் தணைய

திருச்சிற்றம்பலம்

**பதினெட்டாம் நாள்**

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

தேடிச் சென்று திருந்தடி யேத்துமின்
நாடி வந்தவர் நம்மையு மாட்கொள்வர்
ஆடிப் பாடியண் ணாமலை கைதொழ
ஓடிப் போம்நம துள்ள வினைகளே.

**திருவாசகம்**

நினையப் பிறருக் கரிய நெருப்பை
நீரை, காலை, நிலனை, விசும்பை
தனையொப் பாரை யில்லாத் தனியை
நோக்கி, தழைத்து தழுத்த கண்டம்
கனையக் கண்ணீர் அருவி பாயக்
கையுங் கூப்பிக் கடிமலராற்
புனையப் பெறுவ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே

**திருவிசைப்பா**

அல்லியம் பூம்பழனத் தாமூர்நா வுக்கரசைச்
செல்லநெறி வகுத்த சேவகனே தென்றில்லைக்
கொல்லை விடையேறி கூத்தா டரங்காகச்
செல்வ நிறைந்தசிற் றம்பலமே சேர்ந்தனையே

**திருப்பல்லாண்டு**

புரந்தரன் மால் அயன் பூசலிட் டோலமிட்
டின்னம் புகலரிதாய்
இரந்திரந் தழைப்பஎன் உயிர்ஆண்ட கோவினுக்
கென்செய வல்லம்என்றும்
கரந்துங் கரவாத கற்பக னாகிக்
கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம்**

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையின்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொருக்கும்
கானத்தில் எழுபிறப்பைக் கண்களிப்பப் கண்டார்கள்.

திருச்சிற்றம்பலம்

## பத்தொன்பதாம் நாள்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

ஏற தேறு மிடைமரு தீசனார்
கூறு வார்வினை தீர்க்குங் குழகனார்
ஆறு செஞ்சடை வைத்த அழகனார்
ஊறி யூறி யுருகுமெ னுள்ளமே.

**திருவாசகம்**

பண்ணினேர் மொழியாள் பங்க நீயல்லால்
    பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத் தரசே!
    திருப்பெருந் துறையுறை சிவனே!
எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்
    என்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
    வருகஎன் றருள்புரி யாயே.

**திருவிசைப்பா**

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட்(டு) எமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையும்ஆட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானும்அணி தில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே

**திருப்பல்லாண்டு**

சேவிக்க வந்தயன் இந்திரன் செங்கண்மால்
    எங்குந் திசைதிசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக் குழாங்குழா
    மாய்நின்று கூத்தாடும்
ஆவிக் கமுதைஎன் ஆர்வத் தனத்தினை
    அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத் தப்புறத் தானுக்கே
    பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம்**

ஆலமே அமுத மாக உண்டுவா னவர்க்க ளித்துக்
காலனை மார்க்கண் டர்க்காக் காய்ந்தனை அடியேற் கின்று
ஞாலம்நின் புகழே யாக வேண்டும்நான் மறைக ளேத்துஞ்
சீலமே ஆல வாயில் சிவபெரு மானே என்றார்

திருச்சிற்றம்பலம்

## இருபதாம் நாள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

நாளும் நம்முடை நாள்க ளறிகிலோம்
ஆளும் நோய்களோ ரைம்பதோ டாறெட்டும்
ஏழை மைப்பட் டிருந்துநீர் நையாதே
கோளிலி யரன் பாதமே கூறுமே.

### திருவாசகம்

முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யுஞ்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
'அதெந்துவே' என்றரு ளாயே

### திருவிசைப்பா

களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதம்மாறா வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் ஆடரங்கே

### திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே

### பெரியபுராணம்

மண்ணி ணிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வரு கென உரைப்பார்

திருச்சிற்றம்பலம்

## இருபத்தொன்றாம் நாள்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே

**திருவாசகம்**

பிணக்கு இலாத பெருந்துறைப்பெருமான்!
உன் நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கு இலாதது ஓர் இன்பமே வரும்
துன்பமே துடைத்து, எம்பிரான்!
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாமல் என்வினை ஒத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே!

**திருவிசைப்பா**

முத்தீ யாளர் நான்ம றையர் மூவாயிர வர்நின்னோடு
ஒத்தே வாழுந் தன்மை யாளர்ஓதிய நான்மறையைத்
தெத்தே யென்று வண்டு பாடுந் தென்றில்லை அம்பலத்துள்
அத்தாவுன்றன் ஆடல் காண அணைவதும் என்றுகொலோ

**திருப்பல்லாண்டு**

சேலும் கயலும் திளைக்குங்கண் ணார்இளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் கும்மென்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின் றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம்**

மறவாமை யால்அமைத்த மனக்கோயில் உள்ளிருத்தி
உறவாதி தனையுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்தம் எனுந்திருமஞ் சனமாட்டி
அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத்துஅர்ச் சனைசெய்வார்

திருச்சிற்றம்பலம்

## இருபத்திரண்டாம் நாள்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றி னுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணு ளானே

**திருவாசகம்**

உருத்தெரியாக் காலத்தே, உள்புகுந்தென் உளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக், கருணையினால் ஆண்டு கொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள்தில்லை கண்டேனே

**திருவிசைப்பா**

நின்றுநினைந் திருந்துகிடந் தெழுந்து
தொழும் தொழும்பனேன்
ஒன்றிஒரு கால்நினையாது
இருந்தாலும் இருக்கவொட்டாய்
கன்றுபிரி கற்றாப்போல்
கதறுவித்தி வரவுநில்லாய்
நன்றிதுவோ திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே

**திருப்பல்லாண்டு**

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம்**

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத வுணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்

திருச்சிற்றம்பலம்

## இருபத்து மூன்றாம் நாள்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

பகைச்சுடராய்ப் பாவ மறுப்பான் தன்னைப்
பழியிலியாய் நஞ்சுண் டமுதீந் தானை
வகைச்சுடராய் வல்லசுரர் புரமட் டானை
வளைவிலியா யெல்லார்க்கு மருள்செய் வானை
மிகைச்சுடரை விண்ணவர்கண் மேலப் பாலை
மேலாய தேவாதி தேவர்க் கென்றும்
திகைச்சுடரைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

**திருவாசகம்**

வேண்டத் தக்க தறிவோய்நீ!
வேண்ட முழுதுந் தருவோய்நீ!
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ!
வேண்டி என்னைப் பணிகொண்டாய்!
வேண்டி நீயா தருள்செய்தாய்,
யானும் அதுவே வேண்டின்அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்,
அதுவும் உன்றன் விருப்பன்றே!

**திருவிசைப்பா**

மையல் மாதொரு கூறன் மால்விடை யேறி மான்மறி யேந்தி யதடங்
கையன் கார்புரை யுங்கறைக் கண்டன் கனல் மழுவான்
ஐயன் ஆரழல் ஆடு வான்அணி நீர்வயல் தில்லை யம்பலத்தான்
செய்யபாதம் வந்தென் சிந்தை யுள் ளிடங் கொண் டனவே

**திருப்பல்லாண்டு**

தாதையைத் தாள்அற வீசிய சண்டிக்கவ் வண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும் போனக மும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம்**

நன்மைபெரு கருள்நெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந் தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்

திருச்சிற்றம்பலம்

## இருபத்து நான்காம் நாள்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்றே போற்றா நில்லே

**திருவாசகம்**

வேண்டேன்புகழ் வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப் பிறப்புச்சிவம்
வேண்டார் தமைநாளும்
தீண்டேன்சென்று சேர்ந்தேன்மன்னு
திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன்புறம் போகேன்இனிப்
புறம்போகலொட் டேனே

**திருவிசைப்பா**

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர்
படரொளி தருதிரு நீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்றுபொற் குழற்றிருச் சடையுந்
திவள மாளிகை சூழ்தரு தில்லையுள்
திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும் என்மனம்
தழல்மெழு கொக்கின்றதே

**திருப்பல்லாண்டு**

குழல் ஒலி யாழ்ஒலி கூத்தொலி ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி ஆளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடிஎம் மானுக்கே பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம்**

கொண்டு வந்து மனைப்பு குந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலி னாத னத்திடை வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தினில் ஆறு சுவைத்திறத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டரிச்சையில் அமுது செய்யவளித்துளார்

திருச்சிற்றம்பலம்

## இருபத்து ஐந்தாம் நாள்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமுந் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே

**திருவாசகம்**

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே?

**திருவிசைப்பா**

அலந்து போயினேன் அம்பலக் கூத்தனே!
அணிதில்லை நகராளி
சிலந்தி யைஅர சாள்கஎன் றருள்செய்த
தேவதே வீசனே!
உலர்ந்த மார்க்கண்டிக் காகிஅக் காலனை
உயிர்செக உதைகொண்ட
மலர்ந்த பாதங்கள் வனமுலை மேல்ஒற்ற
வந்தருள் செய்யாயே

**திருப்பல்லாண்டு**

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம்**

சடைமருங்கில் இளம்பிறையுந் தனிவிழிக்குந் திருநுதலும்
இடமருங்கில் உமையாளும் எம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும் பெருமையும்முன் கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள்கொடுத்தான்

திருச்சிற்றம்பலம்

## இருபத்தாறாம் நாள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

ஏவியிடர்க் கடலிடைப்பட் டிளைக்கின் றேனை
  யிப்பிறவி யறுத்தேற வாங்கி யாங்கே
கூவிஅம ருலகனைத்து முருவிப் போகக்
  குறியிலறு குணத்தாண்டு கொண்டார் போலும்
தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை
  சரசுவதிபொற் றாமரைபுட் கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
  குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே

### திருவாசகம்

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே

### திருவிசைப்பா

வைத்த பாதங்கள் மாலவன் காண்கிலன்
  மலரவன் முடிதேடி
எய்த்து வந்திழிந் தின்னமுந் துதிக்கின்றார்
  எழில்மறை யவற்றாலே
செய்த்த லைக்கம லம்மலர்ந் தோங்கிய
  தில்லையம் பலத்தானைப்
பத்தியாற் சென்று கண்டிட என்மனம்
  பதைபதைப் பொழியாதே

### திருப்பல்லாண்டு

எந்தைஎந் தாய்சுற்ற(ம்) முற்றும் எமக்கமுதாம்
  எம் பிரான்என் றென்று
சிந்தை செய்யும் சிவன் சீரடியார்
  அடிநாய் செப்புரை
அந்தமில் ஆனந்தச் சேந்தன் எனைப்புகுந்
  தாண்டுகொண் டாருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவ னேஎன்று
  பல்லாண்டு கூறுதுமே

### பெரியபுராணம்

சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந் தருளி யென்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடுஞ் சேவடி போற்றி யென்ன

திருச்சிற்றம்பலம்

## இருபத்தேழாம் நாள்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

பித்தாபிறை சூடீபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி அல்லேனென லாமே

**திருவாசகம்**

முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன் தென்னன்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரந் தீர்க்கும் மருந்து

**திருவிசைப்பா**

உடையும் பாய்புலித் தோலும்நல் லரவமும்
உண்பதும் பலிதேர்ந்து
விடைய தூர்வதும் மேவிடங் கொடுவரை
ஆகிலும் என்னெஞ்சம்
மடைகொள் வாளைகள் குதிகொளும் வயற்றில்லை
யம்பலத் தனலாடும்
உடைய கோவினை யன்றிமற் றாரையும்
உள்ளுவ தறியேனே

**திருப்பல்லாண்டு**

மன்னுக தில்லை! வளர்கநம் பத்தர்கள்!
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள்உமை கோன்அடி
யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம்**

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நாடு உற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழலெம்மாற் போற்ற லாமே

திருச்சிற்றம்பலம்

## இருபத்தெட்டாம் நாள்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும்நா நமச்சி வாயவே

**திருவாசகம்**

என்னால் அறியாப் பதம்தந்தாய்
யான தறியா தேகெட்டேன்
உன்னால் ஒன்றுங் குறைவில்லை
உடையாய் அடிமைக் காரென்பேன்
பன்னாள் உன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடிய ரொடுங்கூடாது
என்னா யகமே பிற்பட்டிங்
கிருந்தேன் நோய்க்கு விருந்தாயே

**திருவிசைப்பா**

அல்லாய்ப் பகலாய் அருவாய் உருவாய்
ஆரா அமுதமாய்க்
கல்லால் நிழலாய் கயிலை மலையாய்
காண அருள் என்று
பல்லா யிரம்பேர் பதஞ்ச லிகள்
பரவ வெளிப்பட்டுச்
செல்வாய் மதில் தில்லைக் கருளித்
தேவன் ஆடுமே

**திருப்பல்லாண்டு**

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங்கடந்த பொருள்அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம்**

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்

திருச்சிற்றம்பலம்

## இருபத்தொன்பதாம் நாள்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவும் நான்படற் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்ப னாகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே

**திருவாசகம்**

நரியைக் குதிரைப் பரியாக்கி ஞால மெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்ச தேற்றும் பெருந்துறையாய்!
அரிய பொருளே! அவினாசி அப்பா! பாண்டி வெள்ளமே!
தெரிய அரிய பரஞ்சோதீ! செய்வ தொன்றும் அறியேனே.

**திருவிசைப்பா**

இறைவனை என்கதியை என்னு
ளேயுயிர்ப் பாகிநின்ற
மறைவனை மண்ணும்விண்ணும் மலி
வான்சுட ராய்மலிந்த
சிறையணி வண்டறையுந் தில்லை
மாநகர்ச் சிற்றம்பலம்
நிறையணி யாம்இறையை நினைத்
தேன்இனிப் போக்குவனே

**திருப்பல்லாண்டு**

நிட்டையி லாஉடல் நீத்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்சீ ராட்டுந்
திறங்களுமே சிந்தித்து
அட்டமூர்த் திக்கென் அகம்நெக ஊறும்
அமிர்தினுக் காலநிழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

**பெரியபுராணம்**

காணாத அருவினுக்கும் உருவினுக்குங் காரணமாய்
நீணாக மணிந்தார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்கம்
நாணாது நேடியமால் நான்முகனுங் காணநடுச்
சேணாருந் தழற்பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய்

திருச்சிற்றம்பலம்

## முப்பதாம் நாள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
எம்மா னைஎளி வந்தபி ரானை
அன்னம்வை கும்வ யற்பழ னத்தணி
ஆரூ ரானை மறக்கலு மாமே

### திருவாசகம்

செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

### திருவிசைப்பா

கூத்தனை வானவர்தங் கொழுந் தைக்கொழுந் தாய்எழுந்த
மூத்தனை மூவுருவின் முத லைமுத லாகிநின்ற
ஆத்தனைத் தான்படுக்கும் அந் தணர்தில்லை யம்பலத்துள்
ஏத்தநின் றாடுகின்ற எம் பிரான்அடி சேர்வன்கொலோ

### திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யும்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்டகன கத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

### பெரியபுராணம்

நேசம் நிறைந்த உள்ளத்தால்
நீலம் நிறைந்த மணிகண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை
எல்லா உயிரும் தொழவெடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க
வந்த பிறப்பை வணங்குவாம்

திருச்சிற்றம்பலம்

## முப்பத்தொன்றாம் நாள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே
  கானப் பேரூராய்
கோட்டூர்க் கொழுந்தே அழுந்தூ ரரசே
  கொழுநற் கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாய்
  பனங்காட் டூரானே
மாட்டூ ரறவா மறவா துன்னைப்
  பாடப் பணியாயே

### திருவாசகம்

இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே

### திருவிசைப்பா

ஏகநா யகனை இமையவர்க் கரசை
  என்னுயிர்க் கமுதினை எதிர்இல்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
  பொன்னெடுஞ் சிவிகையா ஊர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
  மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
  உண்டென உணர்கிலேன் யானே

### திருப்பல்லாண்டு

புரந்தரன் மால் அயன் பூசலிட் டோலமிட்
  டின்னம் புகலரிதாய்
இரந்திரந் தழைப்பஎன் உயிர்ஆண்ட கோவினுக்
  கென்செய வல்லம்என்றும்
கரந்துங் கரவாத கற்பக னாகிக்
  கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
  பல்லாண்டு கூறுதுமே

### பெரியபுராணம்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளார்அடி யாரவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்

திருச்சிற்றம்பலம்

## முப்பத்தி இரண்டாம் நாள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

சோதியாய்ச் சுடருமானார் சுண்ண வெண் சாந்து பூசி
ஓதிவாயுலகம் ஏத்த உகந்துதாம் அருள்கள் செய்வார்
ஆதியாய் அந்தமானார் யாவரும் இறைஞ்சி ஏத்த
நீதியாய் நியமமாகி நின்றநெய்த் தான னாரே.

### திருவாசகம்

சோதியே! சுடரே! சூழ்ஒளி விளக்கே! சுரிகுழல், பணைமுலை மடந்தை
பாதியே! பரனே! பால்கொள் வெண்ணீற்றாய்! பங்கயத்து அயனும்,
மால் அறியா;
நீதியே! செல்வத் திருப்பெருந்துறையில் நிறை மலர்க் குருந்தம் மேவிய சீர்
ஆதியே! அடியேன் ஆதரித்து அழைத்தால், அதெந்துவே என்று, அருளாயே!

### திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத் தொண்டனேன் விளம்புமா விளம்பே

### திருப்பல்லாண்டு

தாதையைத் தாள்அற வீசிய சண்டிக்கவ் அண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

### பெரிய புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோமம் ஆகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்



காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.



# போற்றித்திருத்தாண்டகங்கள்

*திருக்கயிலை* *திருநாவுக்கரசர்*
*ஆறாம் திருமுறை*

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆள் என்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 1

பிச்சாடல் பேயோடு உகந்தாய் போற்றி
பிறவி அறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவி என் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்றும் எய்தாய் போற்றி
போகாது என்சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாகம் அசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 2

மருவார் புரமூன்றும் எய்தாய்போற்றி
மருவி என் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி என்னைப் படைத்தாய்போற்றி
உள்ளாவி வாங்கி ஒளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி ஓடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 3

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்து என்தன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்கும் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ ஆடல் உகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 4

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி எங்கும் பரந்தாய் போற்றி
பெயராது என் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 5

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவர் அறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாது என் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி உலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 6

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்தும் சொல் ஆனாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனும் தீ ஆனாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 7

இமையாது உயிராது இருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாகம் ஆகத்து அணைத்தாய் போற்றி
ஊழி ஏழான ஒருவா போற்றி
அமையா அருநஞ்சம் ஆர்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 8

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழும் தேவே போற்றி
சென்று ஏறி எங்கும் பரந்தாய் போற்றி

ஆவா அடியேனுக்கு எல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 9

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகலம் உடையாய் போற்றி
அடியும் முடியும் இகலி போற்றி
அங்கொன்று அறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலாய் என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 10

உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி
ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்து உகந்த ஈசா போற்றி
பண்ணார் இசையின் சொல்கேட்டாய் போற்றி
பண்டே என் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணாய் உலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 11

## திருத்தொண்டத்தொகை

*சுந்தரமூர்த்தி நாயனார்*

**பண்:** கொல்லிக்கௌவாணம் *ஏழாம் திருமுறை*

தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப் பொருளுக்கு அடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன் மிண்டற்கு அடியேன்
அல்லி மென் முல்லை யந்தார் அமர் நீதிக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 1

இலை மலிந்த வேல் நம்பி எறிபத்தர்க்கு அடியேன்
ஏனாதி நாதன் தன் அடியார்க்கும் அடியேன்
கலை மலிந்த சீர் நம்பி கண்ணப்பர்க்கு அடியேன்
கடவூரில் கலையன் தன் அடியார்க்கும் அடியேன்

மலை மலிந்த தோள் வள்ளல் மானக்கஞ்சாறன்
எஞ்சாத வாள் தாயன் அடியார்க்கும் அடியேன்
அலை மலிந்த புனல் மங்கை ஆனாயர்க்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 2

மும்மையால் உலகு ஆண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர் தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டு எழுந்த தாதை தாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கு அரையன் தன் அடியார்க்கும் அடியேன்
பெரு நம்பி குலச்சிறை தன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்
ஒரு நம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலி புனல் சூழ் சாத்த மங்கை நீல நக்கர்க்கு அடியேன்
அரு நம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 4

வம்பறா வரி வண்டு மணம் நாற மலரும்
மது மலர் நல் கொன்றையான் அடியலால் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர் கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டம் மிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 5

வார் கொண்ட வனமுலையாள் உமை பங்கன் கழலே
மறவாது கல் எறிந்த சாக்கியர்க்கும் அடியேன்
சீர் கொண்ட புகழ் வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டம் குடிமேய சிறுத் தொண்டர்க்கு அடியேன்
கார் கொண்ட கொடை கழறிற்று அறிவார்க்கும் அடியேன்
கடல் காழி கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேல் கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 6

பொய் அடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழில் கருவூர்த் துஞ்சிய புகழ்ச் சோழர்க்கு அடியேன்
மெய் அடியான் நரசிங்க முனைஅரையர்க்கு அடியேன்
விரி திரை சூழ் கடல் நாகை அதிபத்தர்க்கு அடியேன்
கை தடிந்த வரி சிலையான் கலிக்கம்பன் கலியன்
கழல் சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர் கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 7

கறைக் கண்டன் கழல் அடியே காப்புக் கொண்டுஇருந்த
கணம் புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக் கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்ற சீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக் கொண்ட செம்பவளம் இருள் அகற்றும் சோதித்
தொன் மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக் கொண்ட வேல் நம்பி முனை அடுவார்க்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 8

கடல் சூழ்ந்த உலகு எல்லாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழல்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல் சூழ்ந்த தார் நம்பி இடம்கழிக்கும் தஞ்சை
மன்னவனாம் செருத்துணை தன் அடியார்க்கும் அடியேன்
புடை சூழ்ந்த புலி அதள் மேல் அரவு ஆட ஆடி
பொன் அடிக்கே மனம் வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல் சூழ்ந்த வேல் நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 9

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன் பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழு நீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடி சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 10

மன்னிய சீர் மறை நாவன் நின்ற ஊர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகு ஆண்ட செங்கணார்க்கு அடியேன்
திருநீலகண்டத்துப் பாணனார்க்கு அடியேன்

என்னவனாம் அரன்அடியே அடைந்திட்ட சடையன்
இசை ஞானி காதலன் திருநாவலூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமை கேட்டு உவப்பார்
ஆரூரில் அம்மானுக்கு அன்பர் ஆவாரே. 11

திருச்சிற்றம்பலம்

மாதவச் சிவஞான யோகிகள் அருளிய

காலை பூசைக்குப்பின் பாடவேண்டியது

## முத்திபஞ்சாக்கர மாலை

திருவே! என் செல்வச் சிறப்பே! சிவானந்தத் தெள்அமுத
உருவே! உருவமும் ஊருடன்பேரும் ஒன்றும்புணரா
அருவே! தெளிந்த அறிவே! மெய்யன்பர்க்கு அருளும் தெய்வத்
தருவே! தென்கோமுத்தி **முத்தி பஞ்சாக்கர சற்குருவே!**

சுந்தரமால், அயன்வாழ்வும், ஐந்தாரின் சுவர்க்கவைப்பும்
இந்திரஞாலம், கனாஎனக் கண்டு உன் இணையடிக்கே
அந்தம் இல் காதலுற்று ஆராத இன்பத்து அமர்ந்திருக்கத்
தந்தருள்! கோமுத்தி **முத்தி பஞ்சாக்கர சற்குருவே!**

பண்டு அறியாமை பிடித்து விட்டேனை விடாதுபற்றிக்
கொண்டு, குணவழி விட்டுத் திருத்தி, என்கோது அகற்றிப்
புண்டரிகப் பதம் தந்தாய்க்கு என்னால் ஒரு போகம் உண்டே?
தண்தமிழ்க் கோமுத்தி **முத்தி பஞ்சாக்கர சற்குருவே!**

மாயா படலம் கிழித்து, அருள் ஞானம் விளங்கவைத்து, உன்
நேயஆனந்தத்தில் அமிழ்த்திடுவாய்; நித்த முத்தசுத்தத்
தூயா! சராசரபேதங்கள் யாவையும் தோற்றுவிக்கும்
தாயான கோமுத்தி **முத்தி பஞ்சாக்கர சற்குருவே!**

அரணங்கள் மூன்றும் எரித்தாய்! சரணம். அதிலும், அன்பர்
மரணம் படாது அருள் வைத்தாய்! சரணம். வலிய அந்தக்
கரணங்களால் மெலிந்து எய்த்தேன், சரணம்.நின்பொற்கழலே
சரணம். தென்கோமுத்தி **முத்தி பஞ்சாக்கர சற்குருவே!**

மாலை பூசைக்குப்பின் பாடவேண்டியது

## பஞ்சாக்கரதேசிக மாலை

அறிவே அருட்செல்வமே! நிறைவே! அரசே! அடியார்
உறவே என் ஆருயிரே! மணியே! உருகாத நெஞ்சிற்
பிறிவே துரியங் கடந்த சிவானந்தப் பேரமுதச்
செறிவே! கருணைப் பிழம்பே! பஞ்சாக்கரதேசிகனே!

பொய்யும், கவடும், கொடுமையும், வஞ்சமும் பூண்டபொல்லாக்
கையன், கலதி, முழுமூடனேனும் நின் கண்ணருளால்
உய்யும் படி என்று கூடும்? எந்தாய்! உண்மையாளர் அன்பு
செய்யும் துறைசையுள் தேவே பஞ்சாக்கரதேசிகனே!

பரிசு அறியேன் அருட் பண்பு அறியேன் எனைப் பற்றும் வினைக்
கரிசு அறியேன், அது மாற்றறியேன்,கலரோடு இணங்கித்
துரிசுகளே செயும் பொல்லா உலகத் தொழும்பனுக்கு உன்
தெரிசனம் கிட்டுவது என்றோ ? பஞ்சாக்கர தேசிகனே!

மருவேன் உனதடியார் திருக்கூட்டம் மருவி வஞ்சம்
ஒருவேன், மகளிர் விழிக்கடை நோக்குக்கு உளம்பதைத்து
வெருவேன், அடிமையும் எந்நாள் உனதருள் மேவுவனோ?
திருஆவடுதுறைத் தேவே! பஞ்சாக்கரதேசிகனே!

ஆனந்த வாழ்வில் அடியார் எல்லாரும் அகம்களிப்ப
நான் இந்த மாயத் தொடக்கினில் வீழ்ந்து நலிதல் நன்றோ!
வான் அந்தம் நீண்ட மதில் ஆவடுதுறை வாழ்முதலே!
தேன்உந்து பங்கயத் தாளாய் பஞ்சாக்கரதேசிகனே!

வற்றாக் கருணைத் திருநோக்கும் நின்முக மண்டலமும்,
சற்றே முகிழ்த்த குறுமூரலும் ,தட மார்பழகும்,
பொற்றாளும், சின்முத்திரையும் நெஞ் சூடு பொறித்துவைப்பாய்
செற்றார் புரம்செற்ற தேவே! பஞ்சாக்கரதேசிகனே!

தேறாத நெஞ்சும், தெளியாத சிந்தையும், தேங்கி இன்பம்
ஊறாத கண்ணும், ஒழியாக் கவலையும், உன்புகழே
கூறாத நாவும் எனக்கே தகும் என்று கூட்டினையே!
சீறாது அருள்செய்யும் தேவே! பஞ்சாக்கரதேசிகனே!

நின்னருள் நோக்கினுக்கு எவ்வளவேனும் நெகிழ்ந்துருகாது
என்னுடை வன்மனம் மின்னார் விழிக்கடைக்கு என்னில் அந்தோ !

வன்னியின் நேர்மெழுகாய் உருகாநிற்கும் மாயம் என்னே!
செந்நெறியாய் நின்ற தேவே! பஞ்சாக்கரதேசிகனே!

பிறவித்துயர்இனி ஆற்றேன், அடைக்கலம்; பேயுலகின்
மறுகித் திரிந்து அலைந்து எய்த்தேன், அடைக்கலம் மங்கைநல்லார்
உறவைத் தவிர்த்து உய்யக்கொள்வாய்! அடைக்கலம்; உண்மை அன்பர்
செறிவுக்குள் வாழும் மெய்த் தேவே! பஞ்சாக்கரதேசிகனே!

இருவினை தாம் இவை, மும்மலம் ஈங்கிவை, ஈதுசிவம்,
கருவுறும் ஆருயிர் உண்மை இது என்று காட்டவல்ல
குருபரன் நீயன்றி வேறு அறியேன் இக்குவலயத்தில்
திருவெண்ணெய் மெய்கண்ட தேவே! பஞ்சாக்கர தேசிகனே!

*நமச்சிவாய மூர்த்திகள் திருவடி போற்றி!*
*சிவஞான முனிவரின் சீரடி போற்றி!*

## வாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.,

வையம் நீடுக மாமழை மன்னுக!
மெய் விரும்பிய அன்பர் விளங்குக!
சைவ நன்னெறிதான் தழைத்தோங்குக!
தெய்வ வெண் திருநீறு சிறக்கவே!

வான்முகில் வழாது பெய்க! மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க! குறைவிலாது உயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக! உலகமெல்லாம்!

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீ ரடியாரெல்லாம்!